1972 ஏப்ரல் 4]

வாலாஜாப்பேட்டையில் கம்பளி நெசவுத் தொழிற்சாலை.

* 870 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜாப்பேட்டையில் கூட்டுறவுத் துறையில் ஒரு கூட்டுறவு கம்பளி நெசவுத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : வளர்ந்து வரும் தொழில் நிலவரத்திலே நமது அரசாங்கம் அக்கரை கொண்டு வருகிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக கம்பளத் தொழில் சீரும் சிறப்போடும் நடந்து வருகிறது. அதைத் தற்போது தனிப்பட்டவர்கள் நடத்துகிறார்கள். அதனால் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அதைக் கூட்டுறவு முறையில் தொடங்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு முறையில் தொழில் தொடங்க நம்முடைய அரசாங்கம் முழு ஒத்துழைப்புத் தரும். அதைத் தொடங்குபவர்கள் யார் எனபதுதான் பிரச்சினை. மாண்புமிகு அங்கத்தினர் போன்றவர்கள் அவருடைய தொகுதி இது போன்ற முயற்சி எடுத்தால் உதவி செய்யலாம். ஏற்கனவே இரண்டு தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கம்பளிக்காகத் தொடங்கப் பட்டு இரண்டும் நஷ்டத்தில் நடக்கின்றன.

தோவாளை வட்டத்துக்கு முன்சீப் கோர்ட்

* 871 வினா—திரு வி. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா ?

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை தாலுக்காவில் ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஜே. ஜேபஸ் : ஏற்கனவே தோவாளையில் ஒரு கோர்ட் இருந்தது ஆகவே, அரசாங்கம் மறு பரிசீலனை செய்து அங்கு ஒரு முன்சீப். கோர்ட்டை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றம் இப்போதைக்கு அந்த இடத்தில் நீதி மன்றம் தேவையில்லை என்று சொல்லியிருக்கி றார்கள். இருந்தாலும் இதைப் பற்றிப் பரிசீலிக்கும் கமிட்டிக்கு அனுப்பியிருக்கிறார்கள். கமிட்டி அறிக்கை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி போடப்பட்டு ஏறத்தாழ ஓராண்டுக் காலம் ஆகப் போகிறது. அந்த ரிப்போர்ட் எப்போது வரும் ? அதனுடைய அம்சங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தக் குழுவைப் பொறுத்த வரை கடுமையான வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் போட்டி இருக்கிறது. பொதுமக்களும் இங்கு வேண்டும் அங்கு வேண்டுமென்று போட்டியிடுகிறார்கள். வழக்கறிஞர்களும் போட்டியிடுகிறார்கள். நாம் கேட்டிருப்பது நீண்ட நாட்களுக்கு முன்னால் வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் நீதிமன்றங்கள் எல்லை வகுக்கப்பட்டு பல மாற்றங்கள் இன்று ஏற்பட்டிருக்கின்ற நிலையில் மக்கள் வசதிக்கேற்ப, வழக்குரைஞர்கள் வசதிகளையும் கணக்கில் எடுத்து அறிக்கை தயாரித்துக் கொடுக்கச் சொல்லி இருக்கிறோம். அவர்கள் நாடு முழுவதும் சுற்றி மக்கள் பிரதிநிதிகளை எல்லாம் சந்தித்து அறிக்கை தயாரிக்க வேண்டியிருப்பதால் இதிலே காலதாமதம் ஏற்படுவது நியாயந்தான் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சில பகுதிகளில் மூன்று முன்சிப் கோர்ட்டுகள் இருக்கின்றன. சில பகுதிகளில் இரண்டு இருக்கின்றன. சில பகுதிகளில் இல்லை. இப்படி ஒரு சில இடங்களில் குவியலாக இருக்கும் காரணத்தால் இதைப் பரவலாக்கும் அடிப்படையில் கமிட்டியின் பரிந்துரை அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டீசென்ட்ரலைசேஷன் ஆப் கோர்ட்ஸ் என்ற அடிப்படையை வைத்து சில பகுதிகளில் இருக்கும் கோர்ட்டை எடுக்கும்போது அங்கு வேலை பார்க்கும் வழக்குரைஞர்கள் ஆட்சேபிக்கிறார்கள். மதுரைக்குத் தனி உயர்நீதி மன்றப் பிரிவு வேண்டு மென்று திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் உற்சாகத்தோடு வலியுறுத்தி யிருக்கிறார்கள். அவருக்குப் பின்னால் உள்ளவர்கள் எதிர்க்கிறார்கள். இப்படிப் பல பிரச்னைகள் இருக்கும் காரணத்தால் கவனமாகச் செல்ல வேண்டியிருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : இருப்பதை எடுக்காமல் இன்னும் பல இடங்களுக்கு அதிகமாகக் கொடுக்க என்ன செய்ய வேண்டுமோ அந்த முறையில் செய்ய வேண்டுமென்று இந்தக் கமிட்டிக்கு அரசு ஆலோசனை கூறுமா ? அந்தக் குழுவிலே அங்கம் வகிப்பவர்கள் யார் யார் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : டீசென்ட்ரலைசேஷன் என்றால் இருப்பதை எடுத்துத்தான் இன்னொரு இடத்திற்குக் கொடுக்க வேண்டும். அதைத்தான் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஆதரிக்கிறார்கள். அதைத்தான் இந்த அரசாங்கம் ஆதரிக்கிறது. வேலை அதிகமாகி இருக் கின்ற நிலையில் புதிய நீதிமன்றம் வேண்டுமென்றால் அதைக் கொடுக்கத் தயங்கமாட்டோம். இந்தக் குழுவில் மாவட்ட நீதிபதி திரு. வரதராஜன், ஐ.ஏ.எஸ். அலுவலர் திரு. ரகுபதி ஆகிய இரண்டு பேர் இருக்கின்றனர்.

திரு. கோவை செழியன் : வழக்குகள் உடனுக்குடன் பைசலாவதற்காக மொபைல் பெஞ்ச் ஒன்றை மதுரை, கோவை, சேலம் ஆகிய இடங்களில் குறிப்பிட்ட நாட்களில் வைத்து ஜட்ஜுகளை அனுப்பி வைத்து கேஸ்களை உடனடியாக முடிவு செய்ய ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காம்ப் கோர்ட் என்ற முறையில் இது ஒரு நல்ல யோசனை. ஒவ்வொரு நீதிபதியும் ஒவ்வொரு பிரிவைப் பார்க்கிறார்கள். ரிட் அப்பீல், செகண்ட் அப்பீல் என்ற முறையில் தனித்

தனியாகப் பார்க்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வேலைகளை மாவட்டங்கள் தோறும் சென்று பார்க்க வேண்டுமென்பதோடு இல்லாமல், விவகாரங்கள் குறிப்பிட்ட பகுதிகளில் எற்படும்போது, குறிப்பாக மதுரை என்று எடுத்துக்கொண்டால் எப்படி எப்படி கொஞ்சம் கொஞ்சமாகப் பரவலாக உடனடியாக நீதி கிடைக்க வழிவகைகள் செய்யலாம் என்பது தான் அரசாங்கத்தின் கொள்கையாகும். உயர்நீதி மன்றம் இதைப் பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிற நிலையில் மதுரையில் ஒரு உயர்நீதி மன்றம் தரலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கவேண்டுமென்று அரசு பரிந்துரை செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தளவிற்கு இந்தக் குழுவிற்கு அதிகாரம் கிடையாது.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : ஒவ்வொரு தாலூகா தலைமை இடத்திலும் ஒரு முன்சிப் கோர்ட் அல்லது முன்சிப்-கம்-சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் அமைத்துக் கொடுக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நல்ல யோசனையை நம் வழக்குரைஞர் சொல்கிறார்கள். ஆனால் அங்குள்ள வழக்குரைஞர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூடாது என்று சொல்கிறார்கள். ஆகவே, இதை உயர்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அனுப்பி அவர்கள் தான் இதை முடிவு செய்யவேண்டும். சில இடங்களில் எஸ்.டி.எம்.-கம்-முன்சிப் கோர்ட் செயல்பட்டு வருகின்றன. வட்டம் தோறும் அப்படிச் செயல்பட்டால், ஆந்திர மாநிலத்தில் இருப்பதைப் போல், உடனடியாக நீதி கிடைக்க ஒரு வசதி இருக்கும் என்ற கருத்தும் இருக்கிறது.

மதுரையில் வக்பு வாரியத்தால் நடத்தப்படும் கல்லூரி.

***872 வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) வக்பு போர்டால் மதுரையில் நடத்தப்படும் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கடந்த ஆறு மாத காலமாக சம்பளம் கொடுக்கப்படவில்லையா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) 1972-ஆம் வருடம் ஜனவரி மாதம் முடிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : இந்த வக்பு வாரியத்திற்கு நிறைய மூலதனம் இருந்தும்கூட இப்படிச் சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ? அலுவலர்களுக்குக்கூட சம்பளம் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை என்று புகார் கூறப்படுகிறது. ஆகவே, இனிமேலாவது ஒழுங்காக சம்பளம் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தக் கல்லூரியில் மாணவருக்கு ரூ. 76 வீதம் கொடுத்து வந்தார்கள். அதை ரூ. 60 ஆகக் குறைத்து விட்டார்கள். இந்த காலேஜ் என்டோமெண்ட் ப்ராபர்டி